பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

12 06 2024 **WENDESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** ஒடிஷா முதலமைச்சராக பிஜேபி-யின் திரு **Mohan Charan Majhi** இன்று பதவியேற்றார்.

2. சிக்கிம் சட்டப்பேரவைத் தலைவராக திரு **Mingma Norbu Sherba** ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

3. அருணாச்சலப்பிரதேச முதலமைச்சராக திரு **Pema Khandu** நாளை பதவியேற்கிறார்.

**4.** குவைத்தில் நேரிட்ட தீ விபத்தில் 40-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

**5.** இந்தியன் கிராண்ட்பிரி தடகள சாம்பியன் போட்டியில் தமிழகத்தின் கார்த்திக் ராஜா தங்கப்பதக்கம் வென்றார்.

<u>இனி விரிவான செய்திகள்---</u>

**<<<<<<>>>>>**

ஒடிஷா முதலமைச்சராக பிஜேபி-யின் திரு **Mohan Charan Majhi** இன்று பதவியேற்றார்.

புவனேஷ்வரில் நடைபெற்ற இதற்கான விழாவில், அம்மாநில ஆளுநர் திரு **Raghubar Das** அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

திரு **K V Singh Deo** மற்றும் திருமதி **Pravati Parida** துணை முதலமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

இவ்விழாவில், பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் பலர் பங்கேற்றனர்.

ஒடிஷாவில் முதல் முறையாக பிஜேபி ஆட்சிப்பொறுப்பேற்றுள்ளது.

**<<<<<<>>>>>**

சிக்கிம் சட்டப்பேரவைத் தலைவராக கிரந்திகாரி மோர்ச்சா கட்சியை சேர்ந்த திரு **Mingma Norbu Sherba** ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இன்று நடைபெற்ற கூட்டத்தில் துணைத்தலைவராக அக்கட்சியின் **Rajkumari Thapa** –வும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முன்னதாக, இடைக்கால அவைத்தலைவர் திரு **Sanjeet Kharel** புதிய உறுப்பினர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

**<<<<<<>>>>>**

அருணாச்சலப்பிரதேச முதலமைச்சராக திரு **Pema Khandu** நாளை பதவியேற்கிறார்.

இட்டா நகரில் பிஜேபி தலைவர்கள் திரு ரவிசங்கர் பிரசாத் மற்றும் திரு தருண் சுக் பார்வையாளர்களாக பங்கேற்ற பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் அவர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதையடுத்து, இன்று திரு **Pema Khandu** ஆளுநர் திரு **K T Parnaik** –கை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோருவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>**

ஆந்திர மாநில முதலமைச்சராக பதவியேற்றுள்ள திரு சந்திரபாபு நாயுடு-வுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஆந்திர மாநிலத்தின் வளர்ச்சியை மேலும் உயர்த்தும் வகையில், தெலுங்கு தேசம், ஜனசேனா, பிஜேபி கூட்டணி அரசு செயல்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<<>>>>>**

ஜி-ஏழு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை இத்தாலி செல்ல உள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வெளியுறவுத்துறை செயலர் திரு **Vinay Mohan Kwatra**, பிரதமராக தொடர்ந்து மூன்றாவது முறையாக திரு நரேந்திர மோடி பதவியேற்ற பின்னர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாடு பயணம் இது என்று குறிப்பிட்டார்.

இத்தாலி பிரதமரின் அழைப்பை ஏற்று, இப்பயணத்தை திரு நரேந்திர மோடி மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜி-7 உச்சிமாநாடு **Apulia**—வில் வரும் 14-ஆம் தேதி நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ள தலைவர்களுடன் பிரதமர் ஆலோசனை நடத்த உள்ளதாகவும் திரு **Vinay Mohan Kwatra** கூறினார்.

**<<<<<<>>>>>**

மத்திய உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி அத்துறையை சேர்ந்த அதிகாரிகளை சந்தித்து பேசினார்.

இந்த கூட்டத்தில் மத்திய இணையமைச்சர்கள் திரு **B L Varma,** மற்றும் திருமதி **Nimuben Bambhania** கலந்துகொண்டனர்.

அனைத்து மக்களுக்கும் உணவு பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பொது விநியோக அமைப்பை வலுப்படுத்துவதற்கான திட்டங்கள், ஆலோசனைகள் குறித்து இக்கூட்டத்தில் திரு பிரல்ஹாத் ஜோஷி விவாதித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>**

போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வை பரலாக்கும் வகையில் பிரச்சாரம் ஒன்றை போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு மேற்கொண்டுள்ளது.

இன்று முதல், இம்மாதம் 26-ஆம் தேதிவரை இதுதொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இதுதொடர்பாக, போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் வரும் 26-ஆம் தேதி கடைபிடிக்கப்படுவதையொட்டி, இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் பயன்பாட்டுக்கு எதிரான உறுதி மொழியை அனைவரும் இணையவழியில் மேற்கொள்ள வேண்டும் என்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

**<<<<<<>>>>>**

கைம்பெண்களின் நலன் மற்றும் அவர்களது உரிமை பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளை மத்திய – மாநில, யூனியன் பிரதேச அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று தேசிய மனித உரிமை ஆணையம் கூறியுள்ளது.

ஒற்றைச்சாளர முறையில் அவர்களுக்கான நலத்திட்டங்களின் பயன்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் அது கேட்டுக்கொண்டுள்ளது.

கைம்பெண்களுக்கு சொத்தில் உரிமை, அவர்களது திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள், நிதி சுதந்திரம், சுகாதார மேம்பாடு உள்ளிட்ட பத்து அம்சங்களை இந்த ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

கைம்பெண்கள் நலன் தொடர்பான நடவடிக்கைகளுக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாஜிஸ்ட்ரேட் பொறுப்பாவார்கள் என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>**

தில்லியில் நிலவி வரும் நீர் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில் தில்லி அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

இமாச்சலப்பிரதேச மாநிலத்தின் யமுனை நதியில் இருந்து, உபரி நீரை தில்லிக்கு அளிக்க வேண்டும் என்று தில்லி அரசு தாக்கல் செய்துள்ள வழக்கில் நீதிபதி திரு பி கே மிஸ்ரா அமர்வு இன்று விசாரணை மேற்கொண்டது.

விசாரணையின்போது, நீர் வீணாவதற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து தில்லி அரசு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிபதி திரு பி கே மிஸ்ரா உத்தரவிட்டார்.

<<<<<<>>>>>

குவைத்தில் நேரிட்ட தீ விபத்தில் 40 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் இந்தியர்களாக இருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

அங்குள்ள **Mangaf** நகரில் உள்ள தொழிலாளர் குடியிருப்பில் இன்று காலை இந்த விபத்து நேரிட்டதாக அங்குள்ள செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இந்த தீ விபத்து குறித்து வேதனை தெரிவித்துள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

வெளியுறவு இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங், அவசரமாக குவைத் அனுப்பிவைக்கப்படுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை மற்றும் உயிரிழந்தவர்களின் உடல்களை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் போன்ற பணிகளை அவர் ஒருங்கிணைப்பார் என்று வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த விபத்து தொடர்பான விவரங்களை அறிந்துகொள்வதற்கு 9 6 5 – 6 5 5 0 5 2 4 6 என்ற தொலைபேசி உதவி எண்ணும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, குவைத்துக்கான இந்திய தூதர் திரு **Adarsh Swaika** விபத்தில் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு சென்று சந்தித்து ஆறுதல் கூறினார்.

குவைத் துணைப்பிரதமர் திரு **Sheikh Fahad Al-Yousuf al-Saba** சம்பவம் நேரிட்ட இடத்தை நேரில் பார்வையிட்டதாகவும், அந்த அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளரை கைது செய்ய உத்தரவிட்டுள்ளதாகவும் அங்குள்ள செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் **Hardoi** மாவட்டத்தில் இன்று அதிகாலை நேரிட்ட விபத்தில் நான்கு குழந்தைகள் உட்பட எட்டு பேர் உயிரிழந்தனர்.

மணல் ஏற்றிவந்த கனரக வாகனம் ஒன்று ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து, சாலையோரம் இருந்த குடிசையின் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

விபத்தில் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினருக்கு உரிய உதவிகளை செய்யுமாறு அதிகாரிகளுக்கு திரு யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

கார்கில் போரில் பெற்ற வெற்றியின் 25-ஆவது ஆண்டை கொண்டாடும் விதமாக ராணுவ வீரர்கள் பங்கேற்கும் இருசக்கர வாகன பயணத்தை இந்திய ராணுவம் மேற்கொண்டு வருகிறது.

கார்கில் போரில் ஈடுபட்ட வீரர்களின் துணிவை போற்றும் வகையில் இப்பயணம் மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அஸ்ஸாமில் உள்ள **‘Dinjan** , குஜராத்தில் உள்ள துவாரகா, தமிழகத்தில் உள்ள தனுஷ்கோடியில் இருந்து மூன்று குழுக்கள் தில்லியை நோக்கி பயணம் மேற்கொள்வதாகவும், செல்லும் வழியில் கார்கில் போரில் பங்கேற்ற வீரர்களை சந்தித்து மரியாதை செலுத்துவதாகவும் அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வரும் 26-ஆம் தேதியன்று இக்குழுக்களின் பயணம் தில்லியில் நிறைவடைவதாகவும் அந்த அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

ஜம்மு காஷ்மீரின் கத்துவா மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்டுவரும் தேடுதல் நடவடிக்கையில் இன்று மேலும் ஒரு தீவிரவாதி சுட்டுக்கொல்லப்பட்டான்.

**Hiranagar** பகுதியில் நேற்று மாலை தீவிரவாதிகள் - பாதுகாப்புப்படையினர் இடையே ஏற்பட்ட மோதலில், ஒரு தீவிரவாதி கொல்லப்பட்ட நிலையில், இன்றும் அப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் தொடர்ந்து தேடுதலை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த நடவடிக்கையில் இதுவரை மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து நவீன ஆயுதங்கள், மருந்துப்பொருட்கள், மின்னணு சாதனங்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியன் கிராண்ட்பிரி தடகள சாம்பியன் போட்டியில் தமிழகத்தின் கார்த்திக் ராஜா தங்கப்பதக்கம் வென்றார். பெங்களூருவில் இன்று தொடங்கிய இப்போட்டியின் ஆடவர் 400 மீட்டர் ஓட்டப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------

உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று அமெரிக்காவை எதிர்கொள்கிறது. நியூயார்க்கில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

-----------------

**Stuttgart** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-2 என்ற செட் கணக்கில், பிரான்சின் **‘Theo Arribage – Sadio Doumbia** இணையை வென்றது.

-----------

உலக ஜூனியர் மகளிர் செஸ் போட்டியின் 9-ஆவது சுற்று முடிவில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், எட்டு புள்ளிகளுடன் அவர் முதலிடத்தில் உள்ளார்.

----------------

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடும் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் பிரிவில் சந்தீப் சிங் உட்பட எட்டு பேரும், மகளிர் பிரிவில் **Elavenil Valarivan,** மனு பாக்கர் உட்பட ஏழு பேரும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

**--**

ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் பிரணாய், கிரண் ஜார்ஜ், ஆகார்ஷி காஷ்யப், சமீர் வர்மா, அனுபமா, மால்விகா பன்சோட் ஆகியோர் ஒற்றையர் பிரிவுகளிலும், சுமித் ரெட்டி – சிக்கி ரெட்டி இணை கலப்பு இரட்டையர் பிரிவிலும், காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

----------

உலகக்கோப்பை ஜுனியர் ஹாக்கிப்போட்டியை அடுத்த ஆண்டு இந்தியா நடத்தவுள்ளது.

**<<<<<<END>>>>>**